# UNIONS AND ASSOCIATIONS OF BSNL
# தமிழ் மாநிலம்

**எங்கள் பணத்தை நாங்கள் பயன் படுத்த ஏற்பாடு செய்க!**
**என மத்திய அரசை வலியுறுத்தி 22.12.2016 ஆர்ப்பாட்டம்**

**தேதி:- 20.12.2016**

அன்பார்ந்த தோழர்களே,

மத்திய அரசாங்கம் கருப்புப் பணத்தை ஒழிப்பதற்காக என்று காரணத்தை சொல்லி பழைய 500 ரூபாய் 1000 ரூபாய் நோட்டுக்களை செல்லாது என அறிவித்து 50 நாட்களுக்கு மேலாகிறது.

இன்னமும் சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்களும் வார்த்தைகளில் சொல்ல முடியாத அளவிற்கு துயரத்தை சந்தித்து வருகின்றனர். இது வரை மருத்துவ வசதிகளை பெற முடியாமலும், ATM வாசல்களில் வரிசையில் நின்றும், வங்கி பணிகளில் சொல்ல முடியாத பணிச் சுமை காரணமாகவும், தனது குழந்தைகளின் திருமணத்தை நடத்த முடியாமலும் 70க்கும் மேற்பட்டவர்களின் தங்களின் உயிரை இழந்துள்ளனர்.

கருப்புப் பணக்காரர்களிடம் இருந்து புது 2000 ரூபாய் நோட்டுக்கள் கட்டு கட்டாக பறிமுதல் செய்யப் படுவதாக செய்திகள் வருகின்றன. ஆனால் நம்மை போன்ற நடுத்தர மக்கள் தங்களின் அன்றாட செலவுகளுக்காக வங்கிகள் முன்பு மணிக்கணக்கில் தவம் புரிய வேண்டிய அவல நிலை தொடர்ந்து வருகிறது. 50 நாட்கள் கடந்த பின்பும் நிலைமையில் முன்னேற்றம் இல்லை. சிரமம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஒப்பந்த ஊழியர்கள் முதல் பெரும் அதிகாரிகள் வரை தமது சம்பளப் பணத்தைக் கூட அன்றாட செலவுகளுக்கு எடுக்க முடியாத நிலை உள்ளது.

ஆனால் மத்திய அரசாங்கமோ இந்த அவல நிலையை போக்க முயற்சிக்காமல், ப்ளாஸ்டிக் நோட்டுக்களை (CREDIT CARD/DEBIT CARD) பயன்படுத்த இலவச ஆலோசனைகளை கூறி வருகின்றது.

அனைத்து பகுதி மக்களுக்கும் தங்களின் வங்கி இருப்பில் இருந்து தமக்கு தேவையான பணம் பெறுவதை உறுதி செய்யும் வகையில் போதிய பணத்தை வங்கிகள் தருவதையும், ATMகளில் போதிய பணம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி 22.12.2016 அன்று அனைத்து கிளைகளிலும் கூட்டான ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என தமிழக BSNLல் உள்ள அனைத்து ஊழியர் சங்கங்களும் அதிகாரிகள் சங்கங்களும் கூட்டாக அறைகூவல் விடுக்கின்றது.

**எனவே 22.12.2016 அன்று அனைத்து சங்க உறுப்பினர்களையும் திரட்டி ஆர்ப்பாட்டத்தை சக்தியாக நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.**

வாழ்த்துக்களுடன்,

**மாநில செயலாளர்கள்**

**BSNLEU, NFTE, SNEA, AIBSNLEA, AIBNLOA, TEPU, SEWA BSNL, PEWA, SNATTA**